Regestered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (6-4-66) இதழ் 58

விசுவாவசு பங்குனி 24 துல்ஹஜ் பிறை 14 புதன்கிழமை

## தங்கக்கிண்ணத்தை திருடியவர் 5,000 ஸ்டர்லிங் பிணையில் செல்ல உத்தரவு

லண்டன், ஏப். 5

உலக உதை பந்தாட்ட தங்கக்கிண்ணத்தைத் திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட துறைமுக தொழிலாளியான எட்வேர்ட் பிளச்லி (47வயது) 5000 ஸ்டர்லிங் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். 11 அங்குல உயரமுடைய இத்தங்கக்கிண்ணம் கடந்த மாதம் 27-ம் திகதி மீட்கப்பட்டிருந்தது.

இந்தத் தங்கக்கிண்ணம் காணமற் போனதைத் தொடர்ந்து மீட்பு வேலைகள் துரிதமாக நடைபெற்றதும் ஒரு நாயின் உதவியுடன் இது கண்டு பிடிக்கப்பட்டதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்த நாயின் சொந்தக்காரர் தமக்கு 61,000 ஸ்டர்லிங் வெகுமதி தருமாறு கோரியுள்ளார்! (பி. டி. ஐ.)

# யாழ். அபிவிருத்தி திட்டங்கள்

## உணவு மந்திரி தலைமையில் ஆராயப்பட்டது

### உபஉணவுப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உப உணவுப்பொருள்களின் உற்பத்தியை எவ்விதமாக அதிகரிக்கலாமென்பது குறித்து நேற்றுக்காலையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் ஆராயப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சகல காரியாதிகாரிகள் பிரிவுகளிலும் உப உணவு உற்பத்தித் திட்டத்தைப் பெருமளவில் அமுல்செய்வது குறித்து இம்மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

மிளகாய், வெண்காயம், உருளைக்கிழங்கு போன்ற உப்உணவுப் பொருள்களைப் பெருமளவில் உற்பத்தி செய்யவும் இத் திட்டத்தை ஊக்குவிக்கவும்நடவடிக்கைகள் மேற்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில், 1966—1970 ஆண்டுக்கான, மந்திரி காரியாலயத்தினால் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிவிரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டது.

### யாழ்ப்பாணத்தில் வரவேற்பு

உணவு விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா நேற்றுக்காலை புகையிரத மூலம் யாழ்ப்பாணம் வந்த பொழுது அவரை ரயில் நிலையத்தில் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, உதவி அரசாங்க அதிபர் திரு.ஜே. எம். சபாரத்தினம், தலைமைக்காரியாலய காரியாதிகாரி திரு டபிள்யு. டி. செல்வரத்தினம், யாழ்.காரியாதிகாரி திரு.கே சிவஞானம், விவசாயப் பகுதி அதிகாரி திரு. கே. ஜெயசீலன், உணவுக் கட்டுப்பாட்டுப்பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். சிவப்பிரகாசம் உட்பட பலர் மலர்மாலை சூட்டி வரவேற்றனர்.

மந்திரியுடன்பல அரசாங்க உத்தியோகத்தர்களும்வந்திருந்தனர். (ந நி)

உப-உணவு

## உற்பத்தியை அதிகரிக்க இயந்திர உதவி தருக

### உணவு மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

''புத்தூர் வட்டாரத்தில், கூடுதலான நிலப்பரப்பில் உபஉணவுப் பொருள்கள் சாகுபடி செய்ய முடியும். இதனை அமுல் செய்வதற்கு குறைந்த செலவில் சுண்ணாம்புக்கல் உடைக்கும் இயந்திரங்களும் மண் அள்ளும் இயந்திரங்களும் வாடகையில் சேவை புரிய வசதி செய்து கொடுக்க வேண்டும். இத்தற்காக இப்பகுதியில் உழவு இயந்திரமொன்றும் நிறுவப்படுதல் வேண்டும்'' என்று யாழ்ப்பாணம் மாவட்டம் வலி-கிழக்கு விவசாயிகள் சார்பில் உணவு மந்திரி திரு. எம். டி. பண்டாவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வலி-கிழக்கு உருளைக்கிழங்கு அறுவடைப் பெருநாள் நேற்று மந்திரி திரு. எம். டி. பண்டாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நேற்றுப் பிற்பகல் மந்திரி எம். டி. பண்டா, புத்தூர் நிலாவரைச் சந்தியில் கோப்பாய் எம். பி.

( 6-ம் பக்கம் பார்க்க)

## இந்தியகரைக்கு6மைல் தூரத்தில் மிகிர்சென்!

### தனுஷ்கோடியை நோக்கி தீவிரமாகநீந்துகிறார்

மன்னார், புதன்

இந்திய நீச்சல் வீரர் திரு. மிகிர்சன் இச்செய்தி அச்சுக்குப் போகும்போது தனுஷ்கோடிக்கு சுமார் 6 மைல் தூரத்தில் நீந்திக்கொண்டிருப்பதாக தகவல் கிடைத்தது. அவர் நேற்று நள்ளிரவுக்கு முன்பதாக இந்தியக் கரையை அடைந்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

திரு. மிகிர்சனும் அவர் மனைவியும் நேற்று முன்தினம் மாலை மன்னாருக்கு வந்து சேர்ந்தபொழுது அவரை உள்ளூர் மீனவர்களும், இ. தொ காங்கிரஸ் பிரதிநிதிகளும் மற்றும் பிரமுகர்களும் குதூகலமாக வரவேற்றார்கள். மீனவர்கள் ஏலேலோ பண் பாடி மிகிர்சன் தம்பதிகளை மகிழ்வித்தார்கள் திரு மிகிர்சன் மீனவர்களுடன் மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் பேசியபோது பாக்ஜலசந்தியின் நீர்நிலைமை குறித்தும் காலநிலைபற்றியும் கேட்டுத்தெரிந்து கொண்டார் அத்துடன் தம்மோடு சிலரையாவது நீந்த முன்வரும்படி கேட்டுக்கொண்டார்

அவர் நிருபர்களிடம் பேசியபோது, பாரத இளைஞர்கள் வீரச்செயல்களில் இறங்கி உள்ளத்திண்மை பெறவேண்டும் என்பது தமது ஆசையென்றார்

நேற்றுக் காலை 5-40 மணிக்கு பாக்ஜலசந்தியை நீந்திக்கடப்பதற்காக அவர் கடலில் இறங்கியபோது வானத்தில் பிரகாசமான சந்திரன் ஒளிசிதறிக்கொண்டிருந்தது அப்துல் ஜபார் என்ற மீனவர் காலை எட்டு மணிவரை திரு மிகிர்சனுடன் நீந்தியபின் படகில் ஏறிக்கொண்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

### இன்று தீர்ப்பு

கொழும்பு, செவ்வாய்

தெவினுவற, டொடங்கஸ்லந்தை, அம்பாறை முதலிய தேர்தல் வழக்குகளில் தீர்ப்புகள் நாளை 6-ந் திகதி வழங்கப்படும்.

முன்னாள்

## உணவுக் கமிஷனர்மீது வழக்கு!

### வருமானவரி இலாகாவுக்கு கணக்கு விபரம் காட்டவில்லையாம்

கொள்ளுப்பிட்டி, செவ்

முன்னாள் உணவு கமிஷனர் திரு.கே.எம்.டி.ஜயநிதிக்கு எதிராக வருமானவரி இலாகா வழக்கொன்றை கொழும்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளது.

1961-62-க்கான கமிஷன் மதிப்பீட்டில் ரூ 12,126 யை வருமான வரி இலாக்காவுக்குக் காட்டவில்லையென இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. பி. ஜி. எவ். டேவிட் முன்னிலையில் விசாரணைக்கு இன்று எடுத்துக் கொள்ளப் பட்ட இவ்வழக்கு விசாரணையில், முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் திரு. கே. கனகசுந்தரம் திரு. ஜயநிதி மீதான குற்

(6-ம் பக்கம் பார்க்க)

### மரண அறிவித்தல்

மீசாலையைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் காசிப்பிள்ளை (செல்லாச்சி) காலமாகிவிட்டார். இவர் ஆறுமுகத்தின் அருமை மனைவியும். விஜசித்தம்பி (மக்கள் வங்கி, முல்லைத்தீவு), தில்லைநாதன் (இ. போ. ச. பருத்தித்துறை), ரத்தினராசா, சிவராசா, திருநாவுக்கரசு, செல்விகள் செல்லம்மா, வசந்தா தேவி ஆகியோரின் தாயாருமாவர். இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மீசாலையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து, வேம்பிராய் மயானத்துக்கு இவரது பூதவுடல் நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 26

Phone: 296 S. R. S. Grams: "ROHINI"

C. W. E. Textile ஜவுளி மாளிகையில் C. W. E. புடவைகள்

கூ. மொ. வி. ஸ்தாபனப் புடவைகளை வினியோகிப்பதற்கு S. R. S. ஜவுளி மாளிகை ஸ்தாபனத்தார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

7 - 4 - 66 தொடக்கம் கூப்பனுடன் கட்டுப்பாட்டு விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஆர். செல்லத்துரை 216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பணம், சொத்து, பெண்கள், குழந்தைகள் முதலியனவற்ருல் நிலையான திருப்தி ஏற்பட முடியாது. இது எல்லா மக்களின் அனுபவமுமாகும். உண்மையான இன்பம் வேண்டில், குரங்கு மனத்தின் தன்மையை உணர்ந்து, அதை அடக்கி ஒழுங்கு படுத்த ஆவன செய்யவேண்டும்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 387

விசுவாவசு ஆண்டு பங்குனி மீ 24 உ (6-4-66)


## இரத்ததானம்

முல்லைக் கொடி படர்வதற்காகத் தனது தேரையே ஈந்தான் பாரி. அவன் பரம்பரையில் வந்த தமிழர்கள் தானதர்மத்தில் பின்னிற்க மாட்டார்கள். இப்படி நாம் எழுதுவதிலும் மேடைகளில் பேசுவதிலும் வல்லவர்கள். ஆனல் செயலில்...

யாழ்ப்பாணம் இரத்த வங்கி வரண்டுவிட்டது. உயிருக்காக ஊசலாடும் நோயாளரைக் காப்பாற்றுவதற்காக இரத்தம் அவசரமாகத் தேவைப்படுகிறது என யாழ்ப்பாணம் இரத்த வங்கியினர் வானொலிமூலம் அவசர வேண்டுகோள் விடுத்தனர். ஈழநாடு பத்திரிகையும் இந்த வேண்டுகோளை முதல்பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தது. ஆனல் தானத்திலும் தர்மத்திலும் சிறந்து விளங்குபவர்கள் எனப் பெருமை பேசிக் கொள்ளும் நமது மக்களில் ஒரேயொரு பெண்மணியைத் தவிர வேறு எவருமே இரத்ததானம் செய்ய முன்வரவில்லை. இலங்கையில் வேறு எந்தப்பகுதியிலும் இவ்வளவு மோசமான மனப்பான்மையுடையவர்கள் இருப்பார்களென நினைக்க இடமில்லை. உரிமைக்காக இரத்தம் சிந்துவோம்என அறை கூவிய நமது மக்கள் உயிருக்காக ஒரு துளி இரத்தமாவது தானம் செய்ய முன்வரக் கூடாது?

## இந்திராவின் வெற்றி

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து வெற்றியுடன் நாடு திரும்பியிருக்கிருர்.

நமது நாட்டின் கௌரவத்துக்கும் சுயமரியாதைக்கும் பங்கம் நேராமல் பல பிரச்னைகளைப் பற்றியும் வெளிநாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தியாவுக்கு இன்று அவசரமாகத் தேவைப்படும் உதவியையும் பெற்று அவர் திரும்பியிருப்பது அவரது ராஜதந்திரத்துக்கும் அரசியல்ஞானத்துக்கும் சிறந்த சான்று. திருமதி இந்திரா வெளிநாட்டுத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளும் அவர் அங்கு வெளியிட்ட கருத்துக்களும் இந்தியாவின்மீது வெளிநாட்டு மக்கள் அன்பும் ஆதரவும் செலுத்தவும் இந்திய மக்கள்மீது அனுதாபம் கொள்ளவும் பெருமளவு உதவியிருக்கிறது. ஆசியாவின் மிகப் பெரிய ஜனநாயகநாடாக விளங்கும் இந்தியாவை, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதே தங்கள் கடமையும் பொறுப்பும் எனக் கூறிக் கொள்ளும் பிரிட்டனும், அமெரிக்காவும், இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கை காரணமாகச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தன. திருமதி இந்திராவின் வெளிநாட்டுப் பிரயாணம் இந்தச் சந்தேகத்தை ஓரளவாவது நீக்கியிருப்பதுடன், நடுநிலைமைக் கொள்கைக்கும், ஜனநாயகத்துக்கும் ஆதரவையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

திருமதி இந்திராவின் வெளிநாட்டு விஜயத்தினுல் கிடைத்த வெற்றி இந்தியாவுக்கு மட்டுமல்ல, எந்தப் பெரிய பொறுப்பையும் திறமையாக நிறைவேற்றும் தகுதி பெண்களிடம் இருக்கிறது என்பதையும் உணர்த்தியிருப்பதால் பெண்ணுலகத்துக்கும் கிடைத்த வெற்றியாகக் கொள்ளலாம்.

## அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்கவும்

அஹாங்கம, செவ்.

'பௌத்த நோக்கங்களுக்கமையவே தேசியஅரசாங்கம் நாட்டின் நிர்வாகத்தை நடாத்தும்' என உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யூ தஹநாயகா தெவினுவர தொகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

முற்போக்கு கொள்கைகளை நடாத்துவதற்கு பௌத்தமதத் தலைவர்கள் தங்கள் முழு ஆதரவையும் கொடுத்துதவவேண்டுமென்றும் அரசாங்க திணைக்களங்கள் தற்பொழுது அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவில்லையென்றும் மேலும் பேசுகையில் டாக்டர் தஹநாயகா குறிப்பிட்டார்.

## கோணேசர் ஆலய உற்சவம்

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணேஸ்வராலய வருடாந்த உற்சவம் நேற்று நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இதைத் தொடர்ந்து பதினெட்டு நாட்கள் திருவிழாக்கள் நடைபெறும். 24-ந் திகதியுடன் வருடாந்த உற்சவம் முற்றுப்பெறும்.

## இந்தியா அன்பளிப்பு

புதுடில்லி, ஏப். 5

இலங்கைக்கு 1000 கால் நடைகளை இந்தியா அன்பளிப்பு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. விரைவில் இவை இலங்கை வந்து சேரும்.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு கூடுதலான அதிகாரங்கள்

### மந்திரி திருச்செல்வம் தகவல்

சிலாபம், செவ்.

நாட்டின் முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் முகமாக மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கு கூடுதலான அதிகாரங்களும் மான்யங்களும் வழங்கப்படுமென்று ஸ்தலஸ்தாபன மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் இங்கு தெரிவித்துள்ளார்.

சிலாபம் சென். மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற நகரசபைகளின் 27-வது மகாநாட்டில் பேசுகையில் தான் மந்திரி திருச்செல்வம் மேற்கண்டவாறு கூறினர்.

மந்திரி தொடர்ந்து பேசுகையில், உள்ளூராட்சிஸ்தாபனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மான்யங்களை அதிகரிக்குமாறு தாம் நிதிமந்திரியைக் கேட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

நாட்டின் வேலையில்லாப் பிரச்னையை ஒரு தேசியப் பிரச்னையாகக் கருதிஇப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் உள்ளூராட்சி மன்றங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் மந்திரி கேட்டுக்கொண்டார்.

# நிலத்தடி அணு சோதனை பற்றிய யு. எஸ். யோசனை

### ரஷ்யா நிராகரிப்பு

ஜெனிவா, ஏப். 5

நிலத்தின்கீழ் அணுசக்திப் பரீட்சையைத் தடை செய்வதற்கு, ஸ்லத்திலேயே சோதனை நடத்தவேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ள யோசனையை ரஷ்யா நிராகரித்திருக்கிறது.

இது உளவு பார்க்கும் ஒரு நடவடிக்கைஎன்பது ரஷ்யாவின் கருத்து.

நிலத்தின் கீழான அணு சோதனையினல், கதிரியக்க வாயு நில மட்டத்திற்கு மேல் வந்து தாவர வளர்ச்சியில் மாறுதலை ஏற்படுத்தும் என அமெரிக்கா கூறியுள்ளது

ஸ்தலத்தில் நடத்தப்படும் பரிசிலனை வேவு பார்ப்பதாகாது என அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்காவின் யோசனையை அந்நாட்டுப் பிரதிநிதி திரு. பிடிர் தெரிவித்தார்.

## பாகிஸ்தானுக்கு ஆட்சேபம்

புதுடில்லி, ஏப். 5

தடைசெய்யப்பட்ட மீஸோக்களுக்கு வசதிகள் அளித்ததுகுறித்து இந்தியா, பாகிஸ்தானுக்கு ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. ஆனல் பாகிஸ்தான் அரசாங்கம் இதுவரை இந்த ஆட்சேபனைகளுக்குப் பதிலளிக்கவில்லை.

## இந்திரா காந்தி

புதுடில்லி, ஏப். 5

ஸ்ரீமதி இந்திரா காந்தி இலேசாகச் சுகவீனமுற்றிருப்பதால், தமது வெளிநாட்டுப் பயணம் பற்றிய அறிக்கையை இருதினங்களுக்கு ஒத்திவைத்திருக்கிருர்.

டாக்டர்களின் ஆலோசனைகளுக்கிணங்க அவர் இரு தினங்கள் ஓய்வெடுத்துக்கொள்ளுவார்.

## 59 அங்கத்தவர்கள் விஸ்வாசப்பிரமாணம்

புதுடில்லி, ஏப். 5

நாட்டின் பல்வேறு ராஜ்யங்களிலிருந்தும் ராஜ்யசபைக்கு தெரிவு செய்யப்பட்டு அல்லது நியமனம் பெற்றுவந்துள்ள 59 அங்கத்தவர்கள் புதிதாக சபைக்கு வந்தார்கள். அவர்களை சபைமுதல்வர் கைகுலுக்கி வரவேற்றபோது இதர அங்கத்தவர்கள் ஆரவாரம் செய்து வரவேற்ருர்கள். புதிய அங்கத்தவர்கள் தமிழ், ஆங்கிலம், உருது, பஞ்சாபி, வங்காளி போன்ற பல பாஷைகளில் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்கள்.

## தந்தியின் நத்தை வேகம்

யாழ்ப்பாணம், புதன்

உறவினர் ஒருவர் காலமானதாகத் தெரிவித்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒருவர் அவசரம் அவசரமாக அனுப்பிய தந்தி நத்தை வேகத்தில் 'மிதந்து' வந்து உரியவரிடம் சேர்ந்திருக்கிறது. இத்தந்தி வந்துசேர்வதற்கு ஏற்பட்ட தாமதம்: நான்கு நாட்கள். விளைவு: மரணச் சடங்கில் கலந்துகொள்ளத் தவறியது.

சகோதரர் ஒருவர் காலமானதாகத் தெரிவித்து தந்தி அனுப்பப்பட்டதென்றும் ஆனல்நான்கு தினங்கள் கழித்து இந்தத் தந்தி உரியவரிடம் சேர்ந்ததால் குறிப்பிட்ட நபர் மரணச்சடங்கில் கலந்துகொள்ள முடியாது போய்விட்டதென்றும் கூறப்படுகிறது.

## பெயர்ப்பலகைகளில் தமிழுக்கு இடம்

### எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்கக்கட்சிக் பாராளுமன்றக்குழு நிறைவேற்றிய தமது பிரேரணையின் படி அமைச்சர்களுடைய அலுவலகங்களிலும் அவர்கள பொறுப்பிலுள்ள அலுவலகங்களிலும் உள்ளபெயர்ப்பலகைகளில் தமிழைச் சேர்க்குமாறுகேட்டு அமைச்சர் பலருக்கும் கிளிநொச்சி எம்.பி. திரு.கா.பொ' இரத்தினம் அவசரக் கடிதம் அனுப்பியுள்ளார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

இது, என்னை உயிரோடு கொல்லப்பார்க்கிறீர்களே!' என்று சினந்துகொண்டான்.

பொலிஸ் மூக்கை விட்டு விரலை எடுக்கவில்லை.

ஆயிரம் தலை வாங்கிய அபூர்வசிந்தாமணி போன்ற இந்த அபூர்வ மர்மத்தில் 'வில்லன்' யார், 'வில்லி' யார், கதாநாயக நாயகிகள் யார் என்பது இன்னும் வெளிச்சமாகவில்லை. பல ஆசைநாயகிகளை வைத்திருப்பவர் என்று கூறப்படும் ஓர் இ. போ. ச. சாரதியும் இன்னுமொரு கார்ச்சாரதியும் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டிருக்கிருர்கள். இனிமேல் என்னவெல்லாம் நடக்கப்போகிறதோ! பொறுத்திருந்து பார்ப்போம்.

—வழிப்போக்கன்.

## நாட்டிலும் நகரிலும்

புத்தளத்திலிருந்து குருநாகல் போகும் தெரு தெதுறு ஓயா என்ற நதியைக் கடக்கும் இடத்தில் கடந்த மார்ச்மாதம் 20ம் திகதி ஒரு பெண்ணின் தலையற்ற முண்டம் ஆற்றங்கரை மணலில் புதையுண்டிருப்பதை அக்கம்பக்கத்திலுள்ளோர் கண்டுபிடித்து பொலிஸாருக்குத் தெரிவித்தனர். இறந்த பெண்ணின் மர்மத்தைத் துலக்க அன்றுமுதல் இன்றுவரை சி ஐ டி பொலிஸார் எடுத்துவரும் நடவடிக்கைகள் யாவும் வியர்த்தமாகிவிட்டன. ஆனல் அவற்றின் பயனக 'இறந்துபோன' சில பெண்கள் மீண்டும் உயிர்பெற்றுவிட்டனர். அத்துடன் ஒன்றுமறியாத ஒரு பாவிப்பெண் தற்கொலையும் செய்துகொண்டாள்.

முண்டத்தின் தலையை ஆற்றுப்படுக்கையிலும் அயலிலுள்ள குளம் குட்டைகளிலும் தேடினர்கள். கண்டுபிடிக்க முடியவில்லை.

மார்ச் மாதம் 24ம் திகதி கொலையுண்ட பெண் குருநாகல் மாவட்டத்திலுள்ள கலேவலையைச் சேர்ந்த ஐறின்மெண்டிஸ்(வயது 19) என்று தீர்மானிக்கப்பட்டது. ஐறினின் தாயாரும் மூத்த சகோதரியும் மைத்துனரும் முண்டத்தைப் பார்த்துவிட்டு ''இதுஎங்கள் ஐறின் தான்'' என்ருர்கள். ஆயினும் பொலிஸாருக்குச் சந்தேகம். அவர்கள் சந்தேகித்தது நன்மையாய்போய்விட்டது. ஏனென்ருல் சில நாட்களுக்கு முன்பு ஐறின் எவ்விதமான அங்கக்குறைவுமின்றி பொலிஸார் முன் தோன்றி ''நான் இறந்துவிட்டதாக யார் சொன்ஞர்கள்? இதோ முழுசாக இருக்கிறேனே!'' என்ருள்.

பொலிஸ் மூக்கில் கையை வைத்தது.

இதற்கிடையில் நூற்றுக்கணக்கானவர்கள் அந்த முண்டத்தை பார்ப்பதற்கு இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்து யாத்திரைபோகிருர்கள். கொலையுண்டவள் நெடுங்காலமாகக் காணமற்போன தங்கள் புத்திரியாகவோ சகோதரியாகவோ மருகியாகவோ இருக்கக்கூடுமென்பது அவர்களுடைய சபலம். இவர்களைப் போல் ஒருத்திதான் தர்மவதி.

தர்மவதியின் சகோதரி சுமணவதி பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டு திரியும் போதே திடீரென்று ஒருநாள் காணமற்போய்விட்டாள். தெதுறு ஓயாவில் கொலையுண்டவள் சுமணவதியாய் இருக்கலாமோ என்று சந்தேகம் எழுந்தது. ஆனல் இதுவும் பொய்யாகவே போயிற்று. ஒருநாள் காலை சுமணவதி நன்ருக உடுத்திப்படுத்திக் கொண்டு 'வந்தாளே சுமணவதி' என்று பாடினள் பொலிஸார் முன்பாக.

காலன் யாரைத்தான் விட்டான்? சுமணவதி மறுபிறப்பெய்தி வருவதற்கு முன் அவள் யமலோகம் போயே போய்விட்டாள் என்று நினைத்த சகோதரி தர்மவதி ஓடுகின்ற 'உடரெட்டமெனிக்கா'வின் கீழ் தன் தலையைக் கொடுத்துவிட்டாள்!

பொலிஸ் மீண்டும் மூக்கில் விரலை வைத்தது.

கடந்த சனிக்கிழமையன்று கொலையுண்ட பெண் நான்கு மாதங்களாய் காணமற்போய்விட்ட தனது மகள் விமலாவதி என்று பிலியந்தலையைச் சேர்ந்த கரோலிஸ் என்பவரும் வேறு நான்கு பேரும் முண்டத்தை அடையாளம் கண்டனர். நேற்று விமலாவதி பிலியந்தலை பொலிஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்து'என்னை

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12,000 டன் எண்ணெய்க் கப்பலை பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் மறித்தன

## ஆனல் கப்பலை நிறுத்த மறுத்து வேகமாக ஓடுகிருர் காப்டன்

### ரொடீஷியாவுக்கு சப்ளை போகிறதாம்

லண்டன், ஏப்ரல் 5

ரொடீஷியாவுக்கு எண்ணெய் ஏற்றிச் செல்வதாகக் கருதப்படும் 12000 டன் எண்ணெய்க் கப்பல் ஒன்றைப் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் வழி மறித்தன ஆனல் கப்பலை நிறுத்த அதன் தலைவர் மறுத்து, தொடர்ந்து ஓடிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கிழக்காபிரிக்கத் துறை முகமான பகாராவுக்கப்பால் ஆழ்கடலில் இந்த எண்ணெய்க்கப்பல் மறிக்கப்பட்டது. மொஸாம்பிக்கை நோக்கிக் கப்பல் சென்று கொண்டிருப்பதாயும் அங்கிருந்து ரொடீஷியாவுக்கு எண்ணெய் சப்ளை குழாய்கள் செல்வதாயும் கூறப்படுகிறது.

கப்பலை நிறுத்தி திரும்பிச் செல்லுமாறு விடுத்த உத்தரவை அதன்தலைவர் மறுத்து அதன் வேகத்தை அதிகரித்திருக்கிருர்.

இந்த எண்ணெயை தனது துறைமுகத்தில் போர்த்துக்கல் இறக்க அனுமதித்தால், அதனல் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என பிரிட்டன் அறிவித்திருக்கிறது. கிரேக்க கொடியுடன் செல்லும் அக்கப்பலில் சிப்பந்திகள் அனைவரும் கிரேக்கர்கள் எனக் கூறப்பட்டது.

ரொடீஷியாவுக்கு எண்ணெய்த்தடைபற்றிய ஐ. நா.வின் தீர்மானத்திற்கிணங்க கப்பலை நிறுத்தும் பிரிட்டிஷ் நடவடிக்கையை ஆதரிப்பதாயும், ஐ. நா. தீர்மானத்துக்கு மாருனநடவடிக்கைகளில் ஈடுபட்டால் கடும் தண்டனை விதிக்கப்படும் என்றும் கிரீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக இந்தக் கள்ளக்கப்பல், கடலில் அர்த்தமற்றவகையில் சுற்றிக் கொண்டிருந்ததாகவும், பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் 10 மைல் தூரம் அதை விரட்டிச் சென்றன என்றும்அறிவிக்கப்பட்டது.

இதன்பின் கப்பலின் வேகம் பகாரா துறைமுகத்தை நோக்கி வெகுவாக அதிகரிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் மந்திரிசபை இவ்விஷயமாக ஆலோசனை நடத்தியது அதேசமயம் ஏதென்ஸிலுள்ள பிரிட்டிஷ் தூதர் கிரேக்க அரசாங்கத்துடன் ஆலோசனை நடத்துவாக அறிவிக்கப்பட்டது.

கப்பலை மறிக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் விமானந்தாங்கியான "ஈகிலும்" பங்குபற்றியது.

பாதுகாப்புசபை ரொடீஷியா விஷயமாக விரைவில் விவாதிக்கவிருக்கிறது.

### பிரதிநிதிகள் சபை அங்கீகாரம்

வாஷிங்டன், ஏப்ரல் 5

இந்தியாவுக்கு மேலும் 35 லட்சம் உணவுப் பொருள் வழங்கும் ஜனதிபதி ஜோன்ஸனின் திட்டத்தை அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் சபை ஏகமனதாக அங்கீகரித்திருக்கிறது.

இனி செனட்டின் அங்கீகாரத்துக்காக அது அனுப்பி வைக்கப்படும்.

### சென்னையில் தேசிய நினைவுச் சின்னம்

சென்னை, ஏப்ரல் 5

ரூ. 25 லட்சம் செலவில் சென்னையில் தேசிய நினைவுச்சின்னம் ஏற்படுத்தும் வேலை இரு வாரங்களில் ஆரம்பமாகும். இக்கட்டிடம் அரங்கம், சித்திர கூடம், நூலகம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

## மீண்டும் சேரும் இந்தோனேஷிய முடிவுக்கு ஐ. நா. வரவேற்பு

### தென்னபிரிக்கா ஐ. நா. வை விட்டுவிலகுமாம்

நியுயோர்க், ஏப். 5

ஐ. நா.வில் மீண்டும் சேருவதென்ற இந்தோனேஷியாவின் முடிவை ஐ.நா.வட்டாரங்கள் வரவேற்றிருக்கின்றன.

ஆனல் இன்னும் இவ் விஷயமாக பொதுக்காரியதரிசிக்கு உத்தியோக ரீதியில் அறிவிக்கப்படவில்லை யென அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் கடந்த புரட்சியில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 400 பொலிசாரையும், 49 சிவிலியன் ஊழியர்களையும் இந்தோனேஷிய அரசாங்கம் கைதுசெய்திருக்கிறது.

இந்தோனேஷியாவுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதில் அமெரிக்கா மகிழ்ச்சியடையுமெனவாஷிங்டனில் அதிகாரியொருவர் கூறினர்.

பிரிட்டன் 2000 பவுன் வெள்ள உதவி இந்தோனேஷியாவுக்கு அளித்திருக்கிறது.

இந்தோனேஷியா ஐ. நா. வில் சேர விரும்புவதாகக் கூறப்படும் அதேசமயம், தென்னபிரிக்கா ஐ நா. விலிருந்து விலகக் கூடுமென பிரதம மந்திரி வெர்வூட் அறிவித்தார். தேர்தல் மூலம் மக்கள் இதற்குச் சம்மதமளித்திருக்கிருர்களென்றும், பிறநாடுகளின் உள் விஷயத்தில் ஐ. நா. தலையிட்டு செய்திருக்கிறதென்றும் அவர் கூறினர்!

## பொதுத்தேர்தலுக்கு முன்பே பஞ்சாபிசுபா, ஹரியான

### நந்தா தகவல்

புதுடில்லி, ஏப். 5

அடுத்த பொதுத்தேர்தலுக்கு நீண்டகாலத்துக்கு முன்பே பஞ்சாபி சுபா, ஹரியான ஆகிய புது ராஜ்யங்கள் ஆரம்பிக்கப்படும் என உள்துறை மந்திரி திரு. நந்தா கூறினர்.

காங்கிரஸ் அக்கிராசனருடன் 45 நிமிடம் விவாதித்தபின் நிருபர்களிடம் அவர் பேசினர்.

புதிய ராஜ்யங்களின் எல்லைகளை வரையறுக்க விரைவில் நிபுணர்குழு நியமிக்கப்படுமென்றும் அவர் கூறினர்.

பஞ்சாப் மற்றும் பஸ்தார் நிலைமை, கல்கத்தாவில் உத்தேச இரண்டாவது ஹர்த்தாலின் போது சட்டம், ஒழுங்குபற்றி அவர் காமராஜருடன் பேசினர்.

புதிய ராஜ்யங்களில் எல்லைகளை நிர்ணயிக்க கமிட்டியை அரசாங்கம்நியமித்த பின்பு, பஞ்சாபில் பிரதேச காங்கிரஸ் கமிட்டியைச் சீரமைக்கும் விஷயத்தை மேற்கொள்ளப்போவதாய் காமராஜ் கூறினர்.

### நைரோபி மகாநாடு முடிவு

நைரோபி, ஏப். 5

நைரோபியில் நடைபெற்ற 11 ஆபிரிக்க உச்சித் தலைவர்களின் மகாநாடு நேற்று முடிவடைந்தது. ரொடீஷியாமீது கட்டாயமாக பொருளாதாரத்தடை விதிக்கவேண்டும் என்றும், பிரிட்டன் பலாத்காரத்தை உபயோகிக்கவேண்டும் என்றும் அதன் தீர்மானம்ஒன்று கூறுகிறது.

### புயலுக்கு 10 பேர் பலி

வாஷிங்டன், ஏப். 5

அமெரிக்காவிலுள்ள புளோரிடாவில் ஏற்பட்ட புயல், மழை காரணமாக 10 பேர்கொல்லப்பட்டனர். 250 க்கு மேலானேர்கள் மரணம் அடைந்தனர். பஸ் ஒன்று வீசி ஏறியப்பட்டதால் பல பாடசாலைக் குழந்தைகள் காயமடைந்தனர்.

### ஜோன்ஸன்

வாஷிங்டன், ஏப். 5

'நேட்டோ'வை மேலும் பலப்படுத்தவேண்டும் என ஜனதிபதி ஜோன்ஸன் கூறினர். ஒன்றுபட்ட மேற்கு நாடுகளின் குடும்பம் மிகஅவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### ரஷ்யாவுக்கு பாராட்டு

லண்டன், ஏப். 5

சந்திரனைச் சுற்றி வெற்றிகரமாக அனுப்பப்பட்டிருக்கும் 'லூனா-10' ன் சாதனைக்காக ரஷ்யாவை உலகம் முழுவதும் பாராட்டியிருக்கின்றது.

சந்திரனைச் சுற்றும் முதல் துணைக்கோள் இதுவே. இது எப்போதும் சுற்றிக்கொண்டிருக்குமென மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டது.

ரஷ்ய கிரகம், இதுவரை படங்கள் எதையும்அனுப்பியதாகத் தெரியவில்லையென பிரிட்டிஷ் ஜோர்டல் பேங்க் அவதான நிலையம் கூறியது.

விரைவில் சந்திரனில் ராக்கெட் ஒன்றை இறக்கி, மீண்டும் அதைப் பூமிக்குக் கொண்டுவரும் முயற்சியில் ரஷ்யா ஈடுபடும் என இங்கு கருதப்படுகிறது.

### மாஸ்கோ மகாநாடு முடிவு

மாஸ்கோ, ஏப்ரல் 5

மாஸ்கோவில் நடைபெற்ற 23-வது சோவியத் காங்கிரஸ் கூட்டம் நேற்று முடிவடைந்தது. கொள்கை சம்பந்தமான ஒப்புதலை 5000 பிரதிநிதிகளும் ஏகமனதாக வாக்களிப்புமூலம் தெரியப்படுத்தினர்.

### தலைமறைவு நாகர் பேச்சு

புதுடில்லி, ஏப்ரல் 5

வருகிற புதன்கிழமை தலைமறைவு நாகர் குழு ஒன்று பிரதமர் இந்திராவைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் என அறிவிக்கப்பட்டது.

### அக்டோபரில் வருவார்

லண்டன், ஏப்ரல் 5

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் வருகிற அக்டோபர் மாதம் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மலேஸியா, ஆஸ்திரேலியா, நியூஸிலந்து ஆகிய நாடுகளுக்கும் அவர் விஜயம் செய்வார்.

## தென்வியட்னமில் சகல பாடசாலைகளும் மூடப்பட்டன

### நாடெங்கும் அமெரிக்க, அரசாங்க விரோத ஆர்ப்பாட்டங்கள்

### டானங் கிளர்ச்சியை அடக்க துருப்புக்கள் சென்றன

சைகோன், ஏப்ரல் 5

தென்வியட்னமில் வடக்கிலிருந்து தெற்குவரை அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பலநகரங்களிலும் நடைபெற்றதைத் தொடர்ந்து எல்லாப் பாடசாலைகளும் மூடப்பட்டிருக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஒழுங்கீனமான நிலையை கம்யூனிஸ்டுகள் நன்கு பயன்படுத்திக்கொண்டிருக்கிருர்கள்என அறிவிக்கப்படுகிறது.

அரசாங்க விரோத பிரசாரத்திற்கு இடமளிக்காமல் இருக்கும்பொருட்டு டானங் ரேடியோ நிலையம் மூடமாக்கப்பட்டுவிட்டதாகஅறிவிக்கப்பட்டது.

#### துருப்புக்கள் இறங்கின

சைகோனில் மாணவர் ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்காக துருப்புகள் கொண்டுவரப்பட்டன.

அதேசமமம் டானங்கிலுள்ள அமெரிக்க தளத்தில் அரசாங்கத் துருப்புக்கள், அமெரிக்க விமானமூலம் கொண்டுசென்று இறக்கப்பட்டன. கடந்த 2 வாரங்களாக அங்கு நடைபெறும் ஆர்ப்பாட்டங்களை அடக்கு முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தளத்திலுள்ள 20000 அமெரிக்க மாலுமித் துருப்புகள் தளத்தைவிட்டு வெளியேறவேண்டுமென நேற்று உத்தரவிடப்பட்டது. டானங்கில் நேற்று ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையில் டானங் ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணமான அந்நகர மேயர், தமக்கு ராணுவத் தலைவர்களின் ஆதரவு இருப்பதாக அறிவித்தார்.

அரசாங்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யுமாறு பௌத்த தலைவர்கள் மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள்.

#### மாணவர் எச்சரிக்கை

துருப்புகள் அனுப்பப்பட்டால் வீதிகள்தோறும் அவர்களுடன் சண்டை செய்யப்போவதாய் மாணவர்கள் அறிவித்திருக்கிருர்கள்,

அமெரிக்கர்கள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டும் என்றும், அரசாங்கம் ராஜினமாச் செய்யவெண்டும் என்றும் அவர்கள்ஆர்ப்பாட்டம் செய்துவருகிருர்கள்.

#### ராணுவச் சட்டம்

ஒருநகரில் ராணுவச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

விரைவில்நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுமுகமாக அரசியல்கட்சிகள் இந்த நிலையை ஏற்படுத்தியிருப்பதாகஅமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் அறிவித்தார்.

#### அமெரிக்கா அறிவிப்பு

தென்வியட்னமுக்கு புதிய அரசியலமைப்பு ஒன்றைத் தயாரிக்கும்பொருட்டுவியட்காங்கியரைத்தவிர சகலகட்சிகளும் விரைவில் கூடுவதை அமெரிக்கா வரவேற்கும் என ராஜாங்க இலாகா அறிவித்தது.

பிரதமமந்திரிஏர்மார்ஷங் கை டானங்குக்குச் சென்றிருக்கிருர்.

### ஒப்பந்தம்

மாஸ்கோ, ஏப், 5

சீனவும் ரஷ்யாவும் விமா[illegible] கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கற்பிக்கும் முறையில் மாற்றம் வேண்டும்

## உலகத் தமிழ் மகாநாட்டின் ஆலோசனைக்கு ஒரு பிரேரணை

சுழிபுரம், திங்கள்.

இந்தியா, மலாயா, இலங்கைமுதலிய நாடுகளில்தமிழ் கற்பிக்கும் முறை சீரானதாகவில்லையென்றும் அம்முறையை விலக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரி கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மன்ற மகாநாட்டுக்கு ஒரு பிரேரணையை இலங்கை சித்தங்கேணியைச்சேர்ந்த திரு. சி. முத்தையா என்பவர் அனுப்பிவைத்துள்ளார். இப்பிரேரணையை சித்தங்கேணியைச்சேர்ந்த திரு. கு. இரத்தினசபாபதி என்பவர் ஆமோதித்திருக்கின்றார்.

எட்டுப் பக்கங்களைக் கொண்ட அந்த நீண்ட பிரேரணையில, இந்தியா, மலாயா, இலங்கை முதலிய நாடுகளில் தமிழ் கற்பிக்கும் முறை தற்காலத்தில் சீரானதாக இல்லை, அ ஆ இ ஈ உ ஊ, க கா கி கீ, க் ங் ச் என்ற ரீதியில் கல்வி புகட்டப்படுகின்றது. இது மயங்கா மரபுடைய தமிழுக்கு மயக்கம் காட்டுவது. இந்த எழுத்துக்களின் வித்தியாசத்தை சிறுவர் உணரமுடியாது போவதோடு பெரியோர் கல்விகற்கும்பொழுது 'அன அ', 'ஆவன்ன', அ ஆ என்று உச்சரிப்பதற்கு காரணம் என்ன என்று கேட்டால் விளக்கம் கூறமுடியவில்லை. உயிர் இல்லாது ஒன்றும் இயங்காது என்ற அடிப்படைத்தத்துவமும் இழந்துபோகின்றது. என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. விதிக்கு விலக்கான கல்விப் பயிற்சி விலக்கப்படவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

## உயிர்த்த திருநாள்

### வானொலியில் விசேஷ நிகழ்ச்சி

மட்டக்களப்பு, செவ்.

இம்மாதம் பத்தாம் திகதி உயிர்த்த ஞாயிற்றுக்கிழமையைமுன்னிட்டுஇலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பில் காலை 9 மணி முதல் ''காவல்காக்கப்பட்டும்காலியான கல்லறை'' என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பப்படும். மட்டக்களப்பு தன்னுமுனைக் கட்டளைக்குரவர் வண. நோபேட் ஒகஸ் அடிகள் தயாரித்தளிக்கும் இந் நிகழ்ச்சியில்மட்டக்களப்புப் பகுதி வாலிபர்கள், யுவதிகள், சிறுவர்களாக 15 பேரும் ஆசிரியர்கள் இருவரும் கலந்துகொள்கின்றனர். புதியமுறையில் இசைக்கப்பட்டிருக்கும் கத்தோலிக்க கீதங்கள் முதல்தடவையாக வானொலியில் பல வாத்தியங்களுடன் இசைக்கப்படவிருக்கிறது.

அன்றுமாலை 6-15 மணிக்கு ''பரிவட்டத்துணி'' என்ற மற்றொரு நிகழ்ச்சியும் ஒலிபரப்பப்படும்.

## மானிப்பாய் சந்தை முன்னேற்ற விழா

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் சந்தை முன்னேற்ற விழாவை இன்று காலை உதவி ஸ்தலஸ்தாபன அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் ஆரம்பித்து வைப்பார். இவ்விழா மானிப்பாய்ச் சந்தையில் தொடர்ந்து பதினைந்து நாட்கள் வரை நடைபெறும். விழாவின்போது கலைநிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## கண்டியிலும் இரட்டைத்தட்டு பஸ்

கண்டி, செவ்வாய்

கண்டியிலும் இரட்டைத் தட்டுபஸ் சேவையை நடத்துவதற்குவேண்டிய ஒழுங்குகளை இ. போ. ச. செய்து வருவதாக இ. போ. ச. முகாமையாளர் திரு. ஜி. எப். மாண்ட் அறிவித்துள்ளார்.

## இசைக்கலைஞர் சம்மேளன சிறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன்

இசைக்கலைஞர் சம்மேளனத்தின் சிறப்புவிழா எதிர்வரும் வியாழக்கிழமை 7ந் திகதி திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது.

திரு. என். சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் திரு. சதா ஸ்ரீநிவாசன் ஆகியோரின் சிறப்புரைகளும், சங்கீதபூஷணம் ந. சண்முகரத்தினத்தின் இசைக்கச்சேரியும் நடைபெறும்.

## பாடசாலைகளின் இசைவிழாப் போட்டி முடிவுகள்

சாவகச்சேரி, செவ்

''பாடசாலையில் பயிலும் புத்தகப்படிப்பு மாத்திரம் எல்லா மாணவருக்கும் வாழ்க்கையை நடத்தப் போதுமானதாக இருக்க முடியாது. வெவ்வேறு துறையில் சிறப்புபெற்ற மாணவர்களுக்கு கலைவிழாக்களும் படிப்பகங்களாயிருக்கின்றன. வருடாவருடம் கலைவிழாக்கள் நடத்தப்படுவதன் நோக்கமும் இது தான்.''

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சாவகச்சேரி வட்டாரப் பாடசாலைகளின் வருடாந்தக் கதம்ப இசை விழாப் போட்டியில் பேசுகையில் கூறினார்.

400 வருடங்களாக அடிமை மொழியாயிருந்த தமிழ் மொழி, தேசிய அரசாங்கத்தால் அரச மொழியாகக் கைக்கொள்ளப்பெற்றிருக்கிறது. ஒன்பது மாகாணங்களிலுமுள்ள தமிழர் தமிழில் எழுதினால் தமிழ் மொழியில் பதில் கிடைக்கும்'' என்றும் திரு. வி. என். நவரத்தினம் கூறினார்.

மேற்படி விழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி திறந்தவெளிஅரங்கில்நடைபெற்றது.

வடபெரும்பாக உதவி வித்தியாதிகாரி திரு. எஸ். தணிகாசலம் இவ்விழாவுக்கு தலைமைவகித்தார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் பரிசளிக்கப்பட்டன.

மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை(அபிநயப்பாட்டு) சரசாலை சரஸ்வதி வித்தியாசாலை (கிராமியப்பாட்டு), மீசாலை விக்கினேஸ்வரவித்தியாசாலை (பாட்டு), கைதடி ஆங்கில வித்தியாசாலை (கிராமிய நடனம்), கச்சாய் அரசினர் வித்தியாசாலை (அபிநயநடனம்), மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை (நாடகம்) ஆகியவை பரிசுகள் பெற்றன.

## வேலையில்லாதவர்கள் 2 லட்சம் பேர்!

கொழும்பு, செவ்.

வேலையில்லாதவர்கள் தொகை கடந்த பத்துவருட காலத்தில் 1,06,348 ஆக அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் வேலையில்லாதவர்கள் தொகை 1947-ம் ஆண்டில் 34,744ஆக இருந்ததென்றும் 1956-ல் 85,952-ஆக அதிகரித்ததென்றும் ஆனால் கடந்த வருடத்தில் மதிப்பிடப்பட்ட கணக்கின் படி இத்தொகை 1,92,300 ஆக உயர்ந்திருக்கிறதென்றும் தெரியவருகிறது. இந்த விபரங்களை தொழில்பகுதி வெளியிட்டுள்ளது.

கடந்தவருடத்தில்19,452 தேர்ச்சிபெற்றவர்களும் 46,270 ஓரளவு தேர்ச்சி பெற்றவர்களும் 74,135 தேர்ச்சிபெறுதவர்களும் வேலையில்லாமலிருந்தனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஏழாவது தமிழிசைவிழா

யாழ்ப்பாணம், புதன்

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தினரின் ஏழாவது தமிழிசைவிழா இம்மாதம் 18, 19, 20ந் திகதிகளில் நடைபெறும்.

திருநெல்வேலி முத்துமாரியம்மன் சிவன்கோயில் வீதிகளில் அமைக்கப்படும் அரங்கில் இவ்விழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விழாவில் வித்துவான்கள் பலரின் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## காணி வழங்குவதில் பாகுபாடு இருக்காது

யாழ்ப்பாணம், புதன்

காணிக்கச்சேரிகளில் காணி வழங்கும்போது விவாகம் செய்யாதவர்களை புறக்கணித்துவரும் விஷயத்தை அண்மையில் கொழும்பில் கூடிய காணி மின்சார நீர்ப்பாசன அமைச்சரின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் திரு. கா. பொ. இரத்தினம் சுட்டிக்காட்டி விவாகம்செய்யாத இளைஞர்களுக்கும் காணி எவ்வித வேறுபாடுமின்றி வழங்கவேண்டுமென வற்புறுத்தினார்.

அமைச்சர் இவரது கருத்தை ஏற்றுக்கொண்டு வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு நிரந்தரக் காரியதரிசிக்கு பணித்துள்ளார். அரசாங்கம் காணி கொடுக்கும்போது விவசாயப்பயிற்சிபெற்றவர்களுக்கு விசேஷ சலுகை வழங்கும் எனத் தெரிகிறது.

## மன்னாரில் கடும் வறட்சி

மன்னார், செவ்வாய்

மன்னார்ப் பகுதியில் போதிய மழையின்மை காரணமாகக் கடும் வறட்சி நிலவுகிறது. நீர்நிலைகள், குளம் முதலியன வற்றிவிட்டன. மக்கள் குளிப்பதற்கு 2 மைல் தூரமுள்ள தோட்டக் காட்டுக்குளம், சாயற்காரத் தெருக்கோரக்குளத்திற்கும் செல்கின்றனர். வறட்சியின் கொடுமையால் கால்நடைகளும் இறக்கின்றன. தொடர்ந்து மன்னாரில் வறட்சி நீடிக்குமானால் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படலாமென அஞ்சப்படுகிறது.

## குருத்தோலைத் திருநாள்

மன்னார், செவ்வாய்

மன்னார் கத்தோலிக்க மக்கள் குருத்தோலை ஞாயிறு தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடினர். அன்று காலை 7 மணிக்கு அர்ச் செபஸ்தியார் ஆலயத்துக்கு அருகாமையில் விசேஷமாக அமைக்கப்பட்ட பீடத்தில் குருத்தோலைச் சடங்குகளை வண. பிதா பொமிக்கோ ஓ. எம். ஐ. நிறைவேற்றி வைத்தார். அதை தொடர்ந்து அநேக கத்தோலிக்க மக்கள் குருத்தோலை பெற்ற பின் ஊர்வலமாக ஆலயத்திற்குள் பிரவேசித்தனர். மாலையில் நடைபெற்ற திவ்ய பூசைப்பலியுடன் குருத்தோலைத் திருநாள் முடிவுற்றது.

## இடமாற்றம்

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய அதிபர் திருமதி ஏ. டபிள்யு. தங்கராசா மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் குச்சவெளி அரசினர் மகாவித்தியாலயத்தின் அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புதிய அதிபர் நியமனம் செய்யப்படும்வரை செல்வி இராசலட்சுமி விஸ்வலிங்கம் பதில் அதிபராகக் கடமையாற்றுவார்.




உங்களுக்கு இது நடைபெற விடாதீர்கள் -

பற் சொத்தையும் முரசு அரிப்பும் உங்களைப் பீடித்து, உங்களை வாழ்க்கையில் முன்னேறாமல் தடுக்க விடாதீர்கள்.

ஒரு பல் வைத்திய நிபுணர் உருவாக்கிய போர்ஹான்ஸ் பற்பசை, பற்களுக்கு இரட்டிப்புப் பாதுகாப்புத்தருகிறது...... உங்கள் பற்களைச் சுத்தமாக்கிப் பற் சொத்தையைத் தடுக்க உதவுகிறது......முரசுகளைப் பேணி...... உங்கள் வாயையும் சுவாசத்தையும் சுகந்தமாக்குகிறது. பூரண பற்பாது காப்புக்குத் தினமும் போர்ஹான்ஸ் பற்பசை உபயோகியுங்கள்.

போர்ஹான்ஸ்

பற்பசை

முரசுக்கும் பற்களுக்குமான முதன்மையான பற்பசை.





பிரவேசங்கள்

ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம், உயர்தரம் கலை/ விஞ்ஞானம், பிறெப்: விஞ்ஞானம் வகுப்புக்களுக்கு இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும். விடுதி வசதிகள் உண்டு.

ஐக்கியகலாசாலை

நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறைவீதி நல்லூர், யாழ்ப்பாணம்

E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

பீ. ஏ; ஜீ. ஏ. கியு; ஜீ. சீ. ஈ உயர்தரம் கலை ஒரு வருடப் பயிற்சி; ஜீ. சீ. ஈ. சாதாரண தரம் கலை/விஞ்ஞானம்; வர்த்தகம் தமிழ்/ஆங்கிலம் சிங்களம் ஆகிய காலை, மாலை வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உடனே சேருங்கள், சித்தி உறுதி.

**எதிர்பாருங்கள்**

**கலைஞான விழா**

யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி

கைலாசபிள்ளையார் கோவிலடி நல்லூர்

வதிரி — கரவெட்டி

2086


## புதுவருடப்போட்டிகள்

பருத்தித்துறை, செவ்

பருத்தித்துறைப் பொலிஸாரால் நடாத்தப்படும் புதுவருட விளையாட்டுப் போட்டி இம்மாதம் 6ந் திகதி கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியுடன் ஆரம்பமாகின்றது.

25 மைல் மரதன் ஓட்டப் போட்டி ஏப்ரல் 10ந் திகதியும் 5 மைல் மரதன் ஓட்டப்போட்டி புதுவருடப் பிறப்பன்றும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து அன்றிரவும் பெருமளவில் வாண வேடிக்கைப் போட்டிகளும் நடைபெறும்.


**நியூ காலிங்கன்**

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி

நடித்த

**பூம்புகார்**

**ராஜா**

(யாழ்ப்பாணம்)

6-30, 9-45க்கு மட்டும்

**நீதிக்குப் பின் பாசம்**

கலரி 50 சதம்.

4-45க்கு மட்டும்

EUROPE by NIGHT


# மட்டக்களப்பு ஆஸ்பத்திரி தரம் உயர்த்தப்படும்

## சுகாதார மந்திரி உறுதி

மட்டக்களப்பு, செவ்.

'மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியின் தரம் விரைவில் உயர்த்தப்படும். இத்தொகுதியின் சுகாதாரசேவைக்காக அதிக பணம் ஒதுக்க முயற்சிப்பேன்' என்று சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜயவர்த்தன இங்கு ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

மட்டக்களப்பு, கற்குடா, பட்டிருப்பு எம். பிக்களின் அழைப்பின்மீது விஜயம் செய்த சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தனவுக்கு மட்டக்களப்புப் பகுதிகளில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரிக்கு மந்திரி விஜயம் செய்தபொழுது, ஆஸ்பத்திரியின் பிரதம டாக்டர் திரு வி. பொன்னம்பலம் மந்திரியை வரவேற்றுசகல இடங்களையும் காண்பித்தார். மந்திரியுடன் மட்டக்களப்பு எம். பி. க்களும்கற்குடா, பட்டிருப்பு எம். பிக்களும், செனட்டர் எம். மாணிக்கம், அமைச்சரின் நிரந்தரக்காரியதரிசி திரு. ஸி. பாலசிங்கம் மற்றும் உயர்தர உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அப்பொழுது நடைபெற்ற வைபவமொன்றில் சுகாதார மந்திரி பேசுகையில், மட்டக்களப்பின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த ஆஸ்பத்திரியால் முடியாது என்று தாம் கருதுவதாகவும் இடமின்மை காரணமாக நோயாளர்கள் வெளியில் தரையில் நித்திரை செய்வதைத் தாம் காணக்கூடியதாக இருக்கிறதென்றும் இந்தக் குறையைத் தாம் மிகவிரைவில் தீர்த்து வைப்பதாகவும் கூறினார்.

'முந்திய அரசாங்கம், வட, கிழக்கு மாகாணங்களின் முன்னேற்றத்தை கனவிலும் நினைக்கவில்லை என்பதை நன்கு அறியக்கூடியதாக இருக்கிறது. இந்தக் கொடுமையை தேசிய அரசாங்கத்தினால் ஒருபொழுதும் சகிக்கமுடியாது. மட்டக்களப்புப் பிரதிநிதிகளும், கற்குடா, பட்டிருப்புப் பிரதிநிதிகளும் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள். கிழக்கிலங்கையின் தலைப்பட்டினமான மட்டக்களப்பு, ஜனத்தொகைகூடிய ஒரு பிரதேசமென்பதை நான் அறிவேன். உங்களது சுகாதாரக் குறைகளை நீக்கி நல்வழி காட்டவேண்டியது எனது கடமை. மொழி, இன, மத பேதத்தை மறந்து ஈழமாதா பெருமை காண தேசீய அரசாங்கம் பாடுபடுகிறது. மட்டக்களப்புத் தொகுதியில் தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழ்வதைக்கண்டு புளகாங்கிதம் அடைகிறேன். உங்களது ஆஸ்பத்திரியின் தரத்தை கொழும்பு ஆஸ்பத்திரியின் தரத்துக்கு உயர்த்தஎண்ணியுள்ளேன். இத்தொகுதியின் சுகாதாரதேவைக்காக எண்பதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதுமிகவும் குறைவான பணமே. நான் நிதி அமைச்சருடன் வாதாடி பணம்பெற்று, உங்களது சகல குறைகளையும் மிக விரைவில் தீர்த்துவைப்பேன்' என்று சுகாதார மந்திரி உறுதி கூறினார்.

### கற்குடாவுக்கு விஜயம்

சுகாதார மந்திரி பின்னர் கற்குடா எம். பி. திரு. கே. டபிள்யு. வேதநாயகத்துடன் கற்குடா ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து, அங்குள்ள குறைகளை நேரில் பார்வையிட்டார்.

### ஆரையம்பதியில்

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. செ. இராசதுரையுடன் ஆரையம்பதி ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த அமைச்சரை பிரதம வைத்திய அதிகாரி திரு. சு. தங்கவடிவேல் வரவேற்று, சகல இடங்களையும் காண்பித்தார்.

### காத்தான்குடியில்

காத்தான்குடிப் பட்டின சபைத் தலைவர் [illegible] ஜனாப். ஹாசிம் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற விழாவில் மந்திரியை [illegible] மும்மொழியிலும் வரவேற்றுப் பேசினர். தமிழில் தலைவர் பேசுகையில், சுகாதாரஅமைச்சரின் வருகையால் காத்தான்குடியே பெருமை அடைகிறதென்றும் மந்திரி பாகுபாடின்றி எங்களதுதேவையை நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கைதங்களுக்கு நிறைய இருப்பதாகவும் கூறினார்.

மட்டக்களப்பு இண்டாவது எம். பி. ஜனாப் லத்தீப் சின்ன லெவ்வை ஆங்கிலத்தில்பேசுகையில், ''முப்பதாயிரம் மக்களுக்கும் அதிகமாக வாழும் காத்தான்குடி மக்கள் சுகாதார வசதியின்றித் துன்பப்படுகிறார்கள். அமைச்சர் இக்குறையைமிக விரைவில் நிவர்த்தி செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

பட்டினசபை உபதலைவர் ஜனாப். நூர்முகம்மது சிங்களத்தில் உரைநிகழ்த்தினார்.

அமைச்சர் நன்றிதெரிவித்துப் பேசுகையில், ''தேசிய அரசாங்கம் உங்கள் குறைகளை மிக விரைவில் தீர்த்து வைக்கும். உங்களுக்குத் தேவையான சகல சுகாதாரத் தேவைகளையும் நான் நிறைவேற்றித் தருவேன். மிக விரைவில் உங்கள் ஆஸ்பத்திரியின் தரம் உயரும்'' என்று கூறினார்.


**இப்பொழுது நடைபெறுகிறது!**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30.

போயா நாட்களில் 4 காட்சிகள்.

சபையர் (வெள்ளவத்தை) — விஜிதா (அட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) — ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) — மொடேர்ன் (பதுளை)

முத்துராமன், மனோகர், சந்திரகாந்தா, ராஜஸ்ரீ, பேபி ஷகிலா

நடிக்கும்

மொடேர்ன் தியேட்டர்ஸின்

# அம்மா எங்கே?

விரைவில்

கெப்பிட்டல் (கொழும்பு)

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

கடைசி வாரம்

**சர்வர் சுந்தரம்**

REGAL—JAFFNA

NOW SHOWING!

All Great Stars

in M G M's

Big Parade of

Comedy


# சமூக குறைபாடுகள் நீக்கும் சட்டம்

## அமுல் நடத்துமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், புதன்

1957-ம் ஆண்டு பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட சமூகக் குறைபாடுகள் நீக்கும் சட்டத்தை அமுல் நடத்துவதில் பாதுகாப்பு வெளி விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது

மேற்படி சட்டத்தை மீறுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபைக்கு தெரிவித்துள்ளார். அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை இச்சட்டத்தை உடன் அமுல் நடத்துமாறு பிரதமருக்கு சமீபத்தில் விண்ணப்பித்திருந்தது.

## இலவச கல்வி போதனை

உடுப்பிட்டி, செவ்வாய்

அல்வாய் வடக்கு தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியினர் இப்பகுதியிலுள்ள ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி போதனை செய்ய முன்வந்துள்ளனர். தினசரி இரவு நேரங்களில் நடைபெற்று வரும் இவ்வகுப்புக்களை விஸ்தரிப்பதெனவும் வாலிபமுன்னணியின் சார்பில் புதிய பத்திரிகை ஒன்றை ஆரம்பிப்பது எனவும் தீர்மானித்துள்ளனர்.

## புதிய பரீட்சை நடாத்துமாறு உத்தரவு

கொழும்பு, செவ்.

250 பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் 25 உதவிஇன்ஸ்பெக்டர்களையும் தெரிவு செய்வதற்கு ஒரு புதிய பரீட்சையை நடாத்துமாறு பொலிஸ் அதிகாரி திரு. ஜோன் அட்டிகல உத்தரவிட்டுள்ளார்.

இப் பதவிகளுக்கு ஏற்கனவே விண்ணப்பஞ்செய்தவர்கள் சரியான விபரங்கள் கொடுக்காததன் காரணத்தினாலேயே இப் பரீட்சை ரத்துச்செய்யப்பட்டது. எல்லாமாக 23,000 பேர்கள் கான்ஸ்டபிள் பதவிக்கும் 6,000 பேர்கள் உதவி இன்ஸ்பெக்டர் பதவிக்கும் விண்ணப்பம்செய்திருந்தனர்.

## சிரமதானம்மூலம் பொதுக்கிணறு

### உதவிமந்திரி கலந்துகொள்வார்

பருத்தித்துறை, செவ்.

தம்பசிட்டி கிராமத்தில் சிரமதானம்மூலம் பொதுக்கிணறு ஒன்று அமைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வைபவம் இம்மாதம் 18-ம் திகதி நடைபெறும்.

இச்சிரமதான வைபவத்தில் தேசிய சேவைகள் உதவி மந்திரி திரு. பி. பி. வெலகெதர, உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். இதனை திரு. கே. ரி. இராஜசிங்கம் ஒழுங்குசெய்துள்ளார்.

## இந்திரா

புதுடில்லி, ஏப்ரல் 5

பிரதமமந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணம்பற்றி மந்திரிசபைச்சகாக்களிடம் அறிவித்தார்.


## வரிவிளம்பரம்

### தேவை

50,000 ''கி'' தர சாக்குகள் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு 16-4-66 காலை 4 மணிக்கு முன்னர் காரியாலய நேரத்தில் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும். காரியதரிசி, வ. ப. வி. உ. கூ. சமாஜம், 111, பிரதான்வீதி, யாழ்ப்பாணம். 21

அருணா புத்தக நிலையத்தைப் பொறுப்பேற்று நடத்தக்கூடிய பங்காளி ஒருவர் தேவை. நேரில் பேசவும். அருணாபுத்தகநிலையம், 61, பெரியகடை, யாழ்ப்பாணம். 15

நேர்மையும், பொறுப்புணர்ச்சியும் வியாபார அனுபவமும் போதிய பிணை கட்டக்கூடியவருமான ஒரு மனேஜர் தேவை. தகுதி நோக்கிச் சம்பளம் கொடுக்கப்படும். நேரில் பேசவும். அருணா புத்தக நிலையம், 61, பெரிய கடை, யாழ்ப்பாணம். 16

அனுபவமுள்ள பிளேட்டன் மெசின் மைண்டர் தேவை. உடன்விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 17, ஈழநாடு மே/பா எனஎழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 17

மிளகாய் அரைக்க நெல் குத்த நன்கு அனுபவம் உள்ள ஆட்கள் உடனடியாகத்தேவை நேரில் மனுச்செய்க: செல்லம்ஸ் மில்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 20

### விற்பனைக்கு

திறமான மரத்தினால் செய்யப்பட்ட புதிய நெசவுத் தறிகள் விற்பனைக்கு உண்டு. தொகை ஆடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நேரில் கீழ்க்கண்ட விலாசத்தில் பார்வையிடவும்: N. K. மகாதேவா, 83, மணிக்கூட்டு ரோட், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். 18

(Caustic Soda Solid) எட்டு அந்தர் டின் கோஸ்ற்றிக் சோடா விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 86, கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 19


## இரட்டைத்தட்டு பஸ் குடை சாய்ந்தது

கொழும்பு, செவ்வாய்

அங்கொடைக்குச் சென்று கொண்டிருந்த இரட்டைத் தட்டு பஸ் ஒன்று குடை சாய்ந்ததன் காரணமாக பஸ் சாரதி உட்பட இருபத்தைந்து பிரயாணிகள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் எல்லோரும் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஏர் இந்தியா வேலைநிறுத்தம்

புதுடில்லி, ஏப். 5

ஏர் இந்தியா விமான சேவையைச் சேர்ந்த நெவிகேட்டர்கள் மேற்கொண்டிருக்கும் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக லோக் சபையில் அறிவிக்கப்பட்டது. நெவிகேட்டர்களை வேலைக்குத் திரும்பும்படி கோரியிருப்பதாகவும் அவர்கள் திரும்பாதவிடத்து வேலைநீக்கம் செய்யப்படுவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியக்கரைக்கு...,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பீறசேன சச்சாரும், ஏராளமான மன்னார் மீன் பிடிக்காரர்களும் அவரை ஆரவாரத்துடன் வழியனுப்பினார்கள். கடற்படைவைத்தியர் ஒருவரும், ரயில்வே வைத்தியர்ஒருவரும்அவரை அதற்குமுன் சோதித்து நீச்சலுக்குத் தகுதியாய் இருப்பதாகக் கூறியிருந்தார்கள்.

இந்தியாவிலிருந்து சுமார் ஒரு டசின் பத்திரிகைநிருபர்களும், புகைப்படக்காரர்களும் சென்னின் நீச்சலை அவதானிக்க மன்னார் வந்திருந்தனர்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு நீந்திக் கடக்கும் முதல் நபருக்கு இந்திய உயிரினவியல் சங்கம் ''சேது கோப்பை'' விருதை வழங்குவதாக அறிவித்திருக்கிறது. இராமாயண வீரனை ஹனுமானின் உருவம் அதன் மேற்புறம் பொறிக்கப்பட்டுள்ளது.

திரு. சென் இந்திய கடற்படைக் கப்பல் ஐ.என்.எஸ். சுகன்யாவில் நேற்று மன்னார் வந்தடைந்தார்.

இந்தியக்கப்பல்கள் மூன்று மைலுக்கு ஒன்றுவீதம் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிவரை நிறுத்தப்பட்டிருந்தன.

வேலர் என்ற கப்பலில்இந்திய ஆழ்கடல் நீச்சல் வீரர் காப்டன் மார்ட்டின், சென்னைக் கவனித்தவண்ணம் பிரயாணம் செய்தார்.

# ''சகல ஊழியருக்கும் விசேஷ அலவன்ஸ் வேண்டும்''

## பட்டினசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

''இலங்கைப்போக்குவரத்துச்சபை உத்தியோகத்தர்களுக்கு ஓர் விசேட படி வழங்க உத்தேசித்திருப்பது நியாயமானதாகும். அவர்களுக்கு ஏற்படக்கூடிய வாழ்க்கைச்செலவு, மற்றும் அரசாங்க கூட்டுத்தாபன,ஏனையபொது சேவையுளுள்ளோருக்கும் இருப்பதால், எல்லோருக்கும் ஒரே முகமாக விசேடபடியை வழங்க வேண்டுமென்று இச்சபை கருதுகிறது''.

அண்மையில் நடைபெற்ற சங்கானைப்பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் மேற்கண்டபிரேரணை நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு பட்டினசபைத் தலைவர் திரு.சி. க. திருச்சிற்றம்பலம் தலைமை வகித்தார்.

பாராளுமன்ற அங்கத்தவர்களுக்குக் கொடுக்கும் அலவுன்சைக் கூட்ட உத்தேசித்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில், மற்றும் உத்தியோகத்தர்களும் தமது சம்பளத்தை உயர்த்தும்படி கேட்கும் நிலைமை உருவாகுவது சாத்தியமாகையால்முதலில் அரசாங்க சேவையிலிருப்போரின் சம்பளத்தை உயர்த்தி, அவர்களின்வாழ்க்கைச் செலவுக்கஷ்டத்தைப் போக்கியபின் பாராளுமன்ற அங்கத்தவர்களின் அலவுன்சை உயர்த்துவது நியாயமானதென இச்சபை கருதுகிறது என்னும் தீர்மானமும்நிறைவேற்றப்பட்டது.

நாட்டின் கலை வளர்ச்சியை முன்னிட்டு தேசிய படப்பிடிப்புக் கூட்டுத்தாபனம் அமைத்து சிங்கள தமிழ் படப்பிடிப்புக்கு ஊக்குவித்து நாட்டின் மூலதனத்தையும் வெளிநாட்டு செலாவாணியையும் பெற்றுக்கொள்வதற்கும் வேலையில்லாத்திண்டாட்டத்தை போக்கியும் புதைந்து கிடக்கும் கலை உணர்ச்சியை முன்னேற்றி உதவுமாறு அரசாங்கத்தை இச்சபைக் கேட்டுக்கொள்கிறது'' என்று திரு. கா. செல்வராசா கொண்டு வந்த பிரேரணையும் சபையில் நிறைவேற்றப்பட்டது. இப்பிரேரணையை திரு. மா. கணேஷ் ஆமோதித்திருந்தார்.

## உணவுக்கமிஷன்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றச்சாட்டை கூறினார்.

திரு. ஜயநிதி உணவுக் கமிஷனராக இருந்த போது பிறேசிலிலிருந்து சீனி பெற்றுக் கொண்டாரென்று, அப்போது கிடைத்த சில கமிஷன்களை சுவிற்சிலாந்து வங்கியில் போட்டிருந்தாரென்றும், அந்தக் கமிஷன் விபரங்களை காட்டவில்லையென்றும் முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் தமது வாதத்தில் எடுத்துக் காட்டினார்,

முன்னர் நடந்த இலாக்கா விசாரணையில் திரு. ஜயநிதி இதனை ஒத்துக் கொண்டிருந்தாரென்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

திரு. ஜயநிதியின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், இலாகா விசாரணையில் திரு. ஜயநிதி ஒத்துக்கொண்டது இங்கு சாட்சியத்தில் ஏற்றுக் கொள்ள முடியாதென்று கூறினார்.

உயர்தர மதிப்பீட்டதிகாரி திரு. ஏச். ஜே. மித்திரசேன சாட்சியமளிக்கையில், கிடைத்த சில தகவல்களைக்கொண்டு திரு. ஜயநிதியின் வீட்டைச் சோதனையிட்டபோது, சில முக்கிய தஜ்தாவேஜுகள் கிடைத்தனவென்றும் ஒரு வருஷத்துக்கு 2 லட்சம் ரூபா வீதம் ஐந்து வருடத்துக்கு திரு. ஜெயநிதி கமிஷன் பெற்றிருக்கிறார் என்பது தெரியவந்ததென்றும் தெரிவித்தார்.

விசாரணை ஜூன் 3-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

ப நோ கூ

## சமாஜ கிப்பந்திகள் வேலைநிறுத்தம்

வவனியா, செவ்.

சென்ற இருதினங்களாக வவனியா பலநோக்கு கூட்டுறவு சமாஜத்தைச் சேர்ந்த லாரிச் சாரதிகளும், லாரிச் சிப்பந்திகளும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். சமாஜத்துக்குச் சொந்தமான லாரிகளை விற்பதாக சமாஜம் செய்த முடிவை ஆட்சேபித்தே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது.

கொழும்பு, புதன்

அடுத்த பத்து ஆண்டுகளில் வருடத்துக்கு 800 தாதிமார்களை சேவைக்கு எடுப்பதென சுகாதார இலாகா முடிவு செய்திருக்கின்றது.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்

ஈபாஸ்கபேயில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கூப்பன் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி கூப்பனை பெற்றுக்கொள்ளலாம்.

## உபஉணவு உற்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு.கதிரவேற்பிள்ளை, வலிகிழக்குப்பகுதி விவசாய சபையினர், ஊராட்சிமன்றத்தலைவர்கள் ஆகியோரினால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு உருளைக்கிழங்கு சாகுபடியைப் பார்வையிட்டனர். மந்திரியைக் கௌரவிக்குமுகமாக நடைபெற்ற வைபவமொன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரின் விபரம் வருமாறு:

புத்தூர்க் கிராமத்தில் அமைந்துள்ளகமத்தொழிற் காரியாலயம் விவசாயிகளாகிய எங்களது வளர் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான அளவுக்கு நிறுவப்படவில்லை. போதிய உத்தியோகத்தர்களும் இங்கு இல்லை. இக் கமத்தொழில் காரியாலயம் விஸ்தரிக்கப்படவேண்டும். அதற்கு நிரந்தர பொறுப்பாளரான உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் பெறுதல் வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

நெல் வேளாண்மையாளர் செயற்கை உரங்கள் கொள்தற்கு தங்கள் திணைக்களம் வழங்கும் துணைப்பணத்திட்டம் துணை உணவுப் பயிரினச் செய்கைகளுக்கும் வழங்கப்படுதல்வேண்டும்.

தனியார் துறையினர் பூச்சிகொல்லிகள் விற்பனவு செய்யும் போது எமக்கு முக்கியமாகத் தேவையானவற்றுடன் தேவையற்றவற்றையும் நாம் வேண்டவேண்டுமென வற்புறுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு இன்று கிடைத்து வருவதால் கிருமிநாசினிகளின் விற்பனவு முழு உரிமையும் கூட்டுறவுசங்கச் சமாசத்துக்கு இருத்தல் வேண்டும்.

ஒழிவுநிலையிலுள்ள மலையாளம் புகையிலைச் சங்கத்துக்குப் புத்துயிர்அளிக்கும் பொருட்டு, சங்கம் பீடி உற்பத்தி செய்வதற்கு உறுதிப்படுத்தவேண்டும். பல்லாண்டுமங்கியுள்ள தென்இந்தியப் புகையிலை வியாபாரத்தை மீட்டுத் தரும் வாய்ப்புகளை அரசாங்கம்ஆராயவேண்டும்''.

## கண்டெடுக்கப்பட்ட பொருள்

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை வீதியிலுள்ள குளப்பிட்டிச் சந்திக்கருகாமையில் கல்லோயா அபிவிருத்தி சபையின் விற்பனவு மனேஜருக்கு முகவரியிடப்பட்ட சில தஜ்தாவேஜுகளையும் காசோலைகளையும் திரு. பி. கிருஷ்ண பிள்ளை என்பவர் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

இரத்ததான

# சிறுகதை, கவிதை சுவரொட்டி விளம்பர போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் இரத்ததானச் சங்கத்தின் ஆதரவுடன் 'ஈழநாடு' நடத்திய இரத்தான சிறுகதை, கவிதை, சுவரொட்டி விளம்பர போட்டிகளின் முடிவு ஈழநாடு 12-4-66 வாரமலரில் வெளிவருமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறுகதை, கவிதைப் போட்டிகளில் எழுத்தாளர்களும், கவிஞர்களும் ஆர்வத்துடன் பெருமளவில் கலந்துகொண்டனர். ஐநூற்றுக்கு அதிகமான சிறுகதைகளும் கவிதைகளும் போட்டிக்கு வந்திருந்தமையால் அவற்றைப் பரிசிலனை செய்து தரம் பிரித்து, சிறந்தவைகளைத் தெரிவு செய்வதில் சிறிது தாமதமேற்பட்டது, போட்டி முடிவுகள் 12-4-66 'ஈழநாடு வாரமலரில்' வெளிவருகிறது.

றோயல்--மத்தியகல்லூரி கிரிக்கெட் மோதல்

# யாழ். மத்தியகல்லூரிக்கு முதல் ஆட்டத்தில் 110 ஓட்டங்கள்

## றோயல் ஸ்கந்தகுமாரின் அபார விளாசல்!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், கொழும்பு றோயல் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

மத்திய கல்லூரியின் காப்டன் பற்குணராஜா, ஏபரஹம் ஆகியோர் மிகத் திறமையாக துடுப்பெடுத்தாடினார்கள். பற்குணராஜா அடித்த 'சிக்ஸர்' மைதானத்தை சுற்றியிருந்த பெருந்திரளான ரசிகர்களின் கரகோஷத்தைப் பெற்றது.

இதனையடுத்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்த றோயல் கல்லூரி முதல் இரட்டையர்களில் ஒருவர் மத்திய கல்லூரி பந்தெறி வீரர் கணேஷ் குமாரின் பந்து வீச்சுக்கு ஆட்டமிழந்தார். இவர் ஆட்டம் இழக்கும் போது றோயல் கல்லூரி எதுவித ஓட்டமும் எடுக்காமல் முதல் ஓவரிலேயே ஒரு விக்கெட்டை இழந்தது.

மத்திய கல்லூரி பந்தெறி வீரர்களாகிய கணேஷ் குமார், சண்முகலிங்கம் ஆகியோரின் பந்து வீச்சினால் றோயல் கல்லூரி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து, ஆட்டம் நிறுத்தப்படும்போது 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 92 ஓட்டங்களை மாத்திரமே றோயல் பெற்றது. றோயல் கல்லூரி துடுப்படி வீரர் ஸ்கந்தகுமார் மிக அழகாகவும் திறமையாகவும் துடுப்பெடுத்தாடி 47 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்டம் இன்று காலை 10 மணி முதல் தொடர்ந்து நடைபெறும்.

## மரண அறிவித்தல்

காலஞ்சென்ற இளைப்பாறிய போஸ்ட்மாஸ்டரான லூதர் செல்லையாவின் மனைவியும் கலாநிதி லூதர் ஜெயசிங்கம் யாழ்ப்பாணக் கல்லூரி, லூதர் ராஜரட்ணம், டிஸ்டிரிக் ஆபிசர் புத்தளம், லூதர் துரைசிங்கம், டாக்டர் குணரட்னம் லூதர் டி. ம். ஒ. கல்முனை, லூதர் செல்வராஜா யாழ்ப்பாணக் கல்லூரி, திருமதி கே. ஜே. மில்ஸ், திருமதி இராசரத்தினம், திருமதி ஏ. பாலகிருஷ்ணன் ஆகியவர்களின் தாயாரும், வண. கே. ஜே. மில்ஸ், கே, பி. ராஜரட்ணம் திருகோணமலை கூட்டுறவு மத்திய நிலைய பரிசோதகர், ஏ. பாலகிருஷ்ணன் இலங்கை அபிவிருத்தி பொறியியல் கூட்டுத்தாபனம், ஆகியவர்களின் மாமியாருமான அம்மா ராசம் லூதா காலமானார். மரணச்சடங்குகள் உடுவிலில் இன்று(புதன்) 4 மணிக்கு நடைபெற்று நல்லடக்கம் ஏழாலையில் இடம்பெறும். 24

மல்லாகம் — கோட்டைக்காடு கோ. க. செல்வத்துரை அவர்களின் பாரியாரும், சக்கரவர்த்தி, ஈஸ்வரி அம்மாள், அருந்ததி அம்மாள், கனகேஸ்வரி அம்மாள், குகனேஸ்வரி அம்மாள், சிவமணி அம்மாள் ஆகியோரின் தாயாரும் கொழும்பு பெரிய தபாற்கந்தோர் சிருப்பர் கே. நவரத்தினம், சிறம்பான் எஸ். கனகரத்தினம், யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சக அதிபர் வே. கந்தசாமி முதலியோரின் மாமியாருமாகிய திருமதி இளையாச்சிப்பிள்ளையின் தகனக்கிரியை (இன்று) 6-4-66 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். தகவல்: வே. கந்தசாமி, 50/44, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 25


வியாபாரம் பெருக விளம்பரம்செய்க.

புதுவருட தினத்தை

சிறப்பாகக் கொண்டாட

அரியதோர் சந்தர்ப்பம்!

7 - 4 - 66 தொடக்கம்

கூ. மொ. வி. (C. W. E.) ஸ்தாபனத்தாரின் புடவைகள் கூப்பனுடன் கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

ஆ. அப்பையா அன் கோ

கூ. மொ. வி. அங்கீகாரம்பெற்ற புடவை வியாபாரிகள்

கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்

போன்: 506

கிளை: 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org